IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.107/2024

dated : 30.07.2026

D.W. 3

Name முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கிரையம் பெற்ற இடம் ஆதியில் பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர் விருப்புறுதி ஆவணம் ஏதும் எழுதி வைக்காமல் இறந்துபோனார் என்றால் சரிதான். அவருக்கு மனைவி மற்றும் 6 மக்கள் என்றால் சரிதான். பெருமாளின் வாரிசுகள் கூட்டு அனுபவத்தில்தான் சொத்துகள் உள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன். என்னுடைய கிரைய ஆவணத்தில் உள்ள விவரங்கள் சரியானதுதான். என்னுடைய கிரைய ஆவணத்தில் "சொத்து எங்களுக்கு பொதுவாகவும், கூட்டாகவும் பாத்தியப்பட்டு நாங்கள் தீர்வை செலுத்தி அனுபவித்து வரும் சொத்து" என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொத்தை கிரையம் பெறும்போது வாதியிடம் தகவல் சொன்னேன் நான் கிரையம் பெறுவதில் ஆட்சேபனை இல்லை என்று அவர் சொன்னார். 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கிரைய பணத்தை கொடுத்தேன். வாதியிடம் அந்த கிரையத் தொகை கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். என்

சொத்திற்கு கிழக்கே சரஸ்வதி கையிருப்பு நிலம் உள்ளது. என் சொத்திற்கு கிழக்கே உள்ள பகுதியை செல்வசிங் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கூட்டு அனுபவத்தில் உள்ள சொத்தை தனி எல்கை விவரம் குறிப்பிட்டு நான் கிரையம் பெற உரிமையில்லை என்றால் சரியல்ல. எனக்கு தனிபட்டா வழுங்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**6, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை வாதி தரப்பில் மேற்கொள்ளப்பட்ட குறுக்குவிசாரணையை தமதாக ஏற்றுக்கொள்வதாக கூறி பதிவு செய்யப்பட்டது.**

**13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.07.30 18:09:02 +0530